museum of modern
and contemporary art
sri lanka

PRESS RELEASE

2022 **பெப்ரவரி**

**நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம்**
**'சந்திப்புகள்' எனப் பெயரிடப்பட்ட தனது**
**இரண்டாவது கண்காட்சியை அறிவிக்கிறது.**

- 'சந்திப்புகள்' என்பது இலங்கையின் நவீன மற்றும் சமகாலக் கலைகளின் கண்காட்சியாகும். இது பெப்ரவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

- இந்தக் கண்காட்சியானது 1950கள் மற்றும் தற்போதுள்ள கலைப்படைப்புகளுக்கு இடையேயான ஆறு சந்திப்புகளை ஒன்றிணைப்பதாக அமையும்.

நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA Sri Lanka) 'சந்திப்புகள்' எனப் பெயரிடப்பட்ட தனது இரண்டாவது கண்காட்சியின் தொடக்கத் திகதியை அறிவித்துள்ளது. இக்கண்காட்சியானது அருங்காட்சியகத்தின் புதிய அமைவிடமாகிய கிரெஸ்கெட் போலெவர்ட்டில் (Crescat Boulevard) பிப்ரவரி 11 முதல் ஆகஸ்ட் 28, 2022 வரை பொதுமக்கள் பார்வைக்குத் திறந்திருக்கும். இக்கண்காட்சி ஜோர்ஜ் கீற், பிரதீப் தலவத்த, நெலுன் ஹரஸ்கம, சேனக்க சேனநாயக்க, அப்துல் ஹாலிக் அஜீஸ், மற்றும் ஜனனி குரே போன்ற பல்வேறு கலைஞர்களால் 1950களுக்கும் தற்காலத்திற்கும் இடையில் படைக்கப்பட்ட கலைப் படைப்புகள் இடையிலான மாற்றியமைக்கும் காட்சியமைப்பின் ஒரு தொடரான ஆறு சந்திப்புகளை ஒன்றிணைப்பதாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும்.

Groundfloor, Crescat Boulevard
89 Galle Road
Colombo 03

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

ஜோன் கீல்ஸ் மற்றும் ஜோர்ஜ் கீட் அறக்கட்டளையின் சேகரிப்பில் இருந்து பிரத்தியேகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியங்கள் ’சந்திப்புகள்’ கண்காட்சியின் ஒரு பகுதியாகக் காட்சிப்படுத்தப்படும். நாட்டின் மிக முக்கியமான இரண்டு கலைச் சேகரிப்புகளிலிருந்து பல கலைப் படைப்புகளைப் பொதுமக்கள் பார்ப்பதற்கான அரிய வாய்ப்பை ’சந்திப்புகள்’ கண்காட்சி வழங்குகிறது.

“எங்கள் இரண்டாவது கண்காட்சி தொடங்கப்படுவதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த இரண்டு வருடங்கள் எதிர்பாராத பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் நடமாட்ட முடக்கம் போன்றவற்றால் உலகம் முழுவதும் கண்காட்சி நிகழ்ச்சி நிரல்படுத்துகைகளுக்கு உகந்ததாக இருக்கவில்லை. ஆகவே இந்த ஆண்டை, 18 கலைஞர்களின் 46 கலைப்படைப்புகளுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சஞ்சிகைகள் மற்றும் புகைப்படங்களை உள்ளடக்கியதாகப் புதிதாக எடுத்தாளுகை செய்யப்பட்ட கண்காட்சியுடன் தொடங்குவதால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்தக் கண்காட்சியானது மாற்றியமைக்கும் ஆறு காட்சிகளின் ஒரு தொடராக எடுத்தாளுகை செய்யப்பட்டுள்ளது, இங்கு ஒரு காட்சியமைப்பானது ஆறு மாதங்களுக்கும் ஐந்து காட்சியமைப்புகள் ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கும் பார்வையில் இருக்கும். ஒவ்வொரு ’சந்திப்பும்’ முன்னையதிலிருந்து வித்தியாசமாக இருக்கும் என்பதால், ஒவ்வொரு காட்சியமைப்பு மாற்றத்திற்கும் பார்வையாளர்களை மீளக் கண்காட்சிக்கு வருவதை நாங்கள் ஊக்குவிக்கிறோம்,” என MMCA Sri Lankaத்தின் தலைமை எடுத்தாளுனர் ஷர்மினி பெரேரா கூறினார்.

’சந்திப்புகள்’ கண்காட்சிக் காலத்தின் போது, MMCA Sri Lanka செவ்வாய் முதல் ஞாயிறு வரை மு.ப. 10 முதல் பி.ப. 6 திறந்திருக்கும். அருங்காட்சியக நுழைவு மற்றும் அதன் பொது நிகழ்ச்சியின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்பது இலவசம். பகல்வேளையில் திறந்திருக்கும் நேரங்களில் எளிதில் பார்க்க முடியாத பார்வையாளர்களுக்காக, வெள்ளிக்கிழமைகளில் பி.ப. 8 வரை அருங்காட்சியகம் திறந்திருக்கும்.

இந்த அருங்காட்சியகம் பொது மற்றும் தனியார் போக்குவரத்து மூலம் எளிதாக அணுகத்தக்கதாய் போதுமான வாகன நிறுத்துமிட வசதியுடன் அதன் புதிய இடத்தில் அமைந்துள்ளது.

'சந்திப்புகள்' கண்காட்சியானது ஐரோப்பிய ஒன்றியம், கலை முயற்சிகளுக்கான அறக்கட்டளை (Foundation for Arts Initiatives), ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை, மற்றும் Asian Hotels and Properties PLC என்பவற்றின் ஆதரவினைப் பெற்றது.

நாட்டிற்கான நவீன மற்றும் சமகால கலைகளின் அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பது மற்றும் முடிந்தவரை பரந்தளவான பொதுமக்களுக்கு நவீன, சமகாலக் கலை சார்ந்த கற்றல் மற்றும் ஈடுபாட்டை வளர்த்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு கலாச்சார முயற்சியே நவீன மற்றும் சமகாலக் கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் ஆகும். அதன் எடுத்தாளுகை செய்யப்பட்ட கண்காட்சிகள் மற்றும் கல்வித் திட்டங்களுடன் மும்மொழியில் பொது மக்கள் அணுகக்கூடிய இலங்கையின் முதலாவது அருங்காட்சியகம் இது ஆகும்.

மேலும் தகவலுக்கு, www.mmca-srilanka.org ஐப் பார்வையிடவும் அல்லது facebook.com/mmcasrilanka எனும் முகப்புத்தகம் மற்றும் instagram.com/mmcasrilanka/ எனும் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர்களைப் பின்தொடரவும்.